சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2016- விதிமுறைகளும் நிபந்தனைகளும்

1. தகுதி

(அ) போட்டியில் பங்கேற்கும் காலகட்டத்தில் 18 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதை அடைந்துள்ள சிங்கப்பூர்க் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் இப்போட்டியில் பங்கேற்கலாம்.

2. பிரிவு

(அ) ஜனவரி 1, 2014-லிருந்து டிசம்பர் 31, 2015 வரையிலான காலப் பகுதியில் சிங்கப்பூரிலோ அல்லது வெளிநாட்டிலோ வெளியிடப்பட்ட சிறுகதைகள், நாவல்கள் (புதினங்கள் ) , கவிதைகள், கற்பனை சாராத இலக்கியப் படைப்புகள் ஆகியவை இப்போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) சமர்ப்பிக்கப்படும் படைப்புகளின் பெரும்பகுதி உள்ளடக்கமும் முதன்முறை பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

3. பொருளும் கருவும்

(அ) சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் எந்த ஒரு பொருளையோ, கருவையோ கொண்டிருக்கலாம்.

(ஆ) உண்மைச் சம்பவங்கள், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, இலக்கிய இதழியல், நினைவுக் குறிப்புகள், பயணக் கட்டுரைகள், சமையல் தகவல்கள் முதலிய பொருள்களில் எழுதப்பட்ட , பொதுமக்கள் அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளத் தக்க இலக்கிய வடிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மேற்கல்வி, பட்டப் படிப்பு வாசிப்பை இலக்காகக் கொண்டு எழுதப்பட்டவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

4. மொழி

(அ) ஒவ்வொரு பிரிவிலும் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகியவற்றில் ஏதேனும் ஓர் அதிகாரப்பூர்வ மொழியில் இருக்க வேண்டும்.

5. மூலம்

(அ) ஒவ்வொரு படைப்பும் போட்டியில் பங்கேற்கும் படைப்பாளரின் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும்.

(ஆ) சமர்ப்பிக்கப்படும் படைப்பு, போட்டியில் பங்கேற்கும் படைப்பாளருக்கு மட்டுமே சொந்தமானதாக இருத்தல் அவசியம்.

(இ) சமர்ப்பிக்கப்படும் படைப்பின் ஆசிரியர்கள் இருவருக்கு மேல் இருத்தல் கூடாது.

(ஈ) பிரசுரமான படைப்புகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். போட்டியில் இடம்பெறத் தகுதி பெறுவதற்கு, நூல்கள் பொது வர்த்தக முறையில் அச்சிடப் பட்டுப் பிரசுரமாகி இருக்க வேண்டும்.

6. படைப்புகளின் எண்ணிக்கை

(அ) போட்டியில் பங்கெடுப்பவர் ஒன்றுக்கு மேற்பட்ட படைப்புகளை அனுப்பலாம். அப்படைப்புகள் ஒன்று மற்றொன்றைப்போல் அமையாமலும், ஒன்றின் வேறுபட்ட வடிவமாக இல்லாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) ஒரு படைப்பை ஒரேயொரு மொழி சார்ந்த பிரிவுக்கு மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும்.

(இ) ஒவ்வொரு படைப்போடும் அதிகாரப்பூர்வ நுழைவுப் படிவமும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். போட்டியாளர் தமது ஒவ்வொரு படைபிற்கும் நான்கு (4) பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) படைப்புகளை எழுத்தாளரோ வெளியீட்டாளரோ சமர்ப்பிக்கலாம்.

7.தேர்வு

(அ) ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் மூன்று (3) நடுவர்கள் இருப்பார்கள்.

(ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. அவர்களின் முடிவு பற்றி எத்தகைய கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

8. முடிவு நாள்

(அ) படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 8 ஜனவரி, 2016, மாலை 5.00 மணி.

9. சமர்ப்பிக்கப்பட்ட படைப்புகள்

(அ) வரும் வழியில் தொலைந்து போன அல்லது சேதமடைந்த படைப்புகளுக்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள்.

(ஆ) சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்குச் சமர்ப்பிக்கப்படும் நூல்களைச் சிங்கப்பூர்த் தேசியப் புத்தக மேம்பாட்டு மன்றம் தன்வசம் வைத்துக் கொள்ளும்.

10. விருது

(அ) சிங்கப்பூர் இலக்கியப் பரிசை வெல்லும் ஒவ்வொரு மொழிப் பிரிவின் படைப்பாளரும் $10,000 தொகையையும் சிறப்பு நினைவுத் தட்டையும் பெறுவார்.

(ஆ) ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் ஒரேயொரு இலக்கியப் பரிசை மட்டுமே வழங்க நடுவர்கள் முன்மொழிவார்கள். சமர்ப்பிக்கப் பட்ட படைப்புகளில் இலக்கியப் பரிசுக்குத் தகுதி வாய்ந்த படைப்பு இல்லையெனில், விருது வழங்கப்பட மாட்டாது.

(இ) இலக்கியப் பரிசுக்கு ஒருவரும் தகுதி பெறவில்லையெனில், அதற்குப் பதிலாக நடுவர்கள் தகுதிப் பரிசாக S$5,000 அல்லது பாராட்டுப் பரிசாக S$1,000 வழங்குவார்கள். ஒவ்வொரு மொழிப் பிரிவுக்கும் வழங்கப்படும் மொத்தப் பரிசுத் தொகை S$10,000க்கு உட்பட்டிருக்கும்.

11. தேர்வுப் பட்டியல்

(அ) சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்காகத் தேர்வு செய்யப்பட்ட படைப்புகளின் பட்டியலை ஏற்பாட்டுக்குழு, மே 2016ல் அறிவிக்கும்.

12. வெற்றியாளர்களை அறிவித்தல்

(அ) வெற்றி பெற்றவர்கள் அனைவருக்கும் ஜூலை 2016ல் நடைபெறும் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். வேற்றியாளர்களின்

பெயர்கள் விருது வழங்கும் விழாவில்தான் அறிவிக்கப்படும். அதற்கு முன்பாக அவர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. பரிசீலனைக்குத் தேர்வு பெற்ற எழுத்தாளர்கள் யாரேனும் விழாவில் கலந்து கொள்ள இயலாமற் போனால், அவர்கள் தங்கள் சார்பில் ஒருவரை அனுப்பி, தங்கள் படைப்புக்குப் பரிசு கிடைக்குமானால், அதனைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

13. பொறுப்பு

(அ) பரிசீலனைக்குத் தேர்வு பெற்றவர்களும், இலக்கியப் பரிசு வென்றவர்களும், வளரும் எழுத்தாளர்களுக்கு இலக்கிய உரையாற்றுதல், பயிற்சிப் பட்டறை நடத்துதல், வழிகாட்டி ஆலோசனை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட அழைக்கப் படுவார்கள்.

(ஆ) பரிசீலனைக்குத் தேர்வு பெற்ற படைப்பாளிகளும் , வெற்றி பெற்ற எழுத்தாளர்களும் ஊடகங்களுடன் கலந்துரையாடவும், சிங்கப்பூர் இலக்கியப் பரிசு தொடர்பில் சிங்கப்பூர்ப் தேசிய புத்தக மேம்பாட்டு மன்றம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரவும் வேண்டும்.

14. சமர்ப்பித்தல்

(அ) படைப்புகள் அனைத்தையும் ( ஒவ்வொரு படைப்பிலும் நான்கு (4) பிரதிகள் இருக்க வேண்டும் ) பதிவு அஞ்சலிலோ நேரிலோ “ சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2016 “ என உறையில் குறிப்பிட்டுக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் :

Singapore Literature Prize (SLP) 2016

National Book Development Council Of Singapore

C/O Geylang East Public Library

50 Geylang East Avenue 1

Singapore 389777

(ஆ) சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு படைப்புடன் , பூர்த்தி செய்யப்பட்ட அதிகாரப்பூர்வ நுழைவுப் படிவமும், படைப்பாளியின் புகைப்படமும், வாழ்க்கைச் சுருக்கமும் ( 50 சொற்களுக்கு மிகாமல் ) அடையாள அட்டையின் நகலும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

முக்கியத் தேதிகள்:

26 அக்டோபர் 2015.......................................சமர்ப்பிக்கும் முதல் நாள்

8 ஜனவரி 2016................................................ சமர்ப்பிக்கும் கடைசி நாள்

மே 2016 ..........................................................பரிசீலனைக்குத் தேர்வுபெற்ற படைப்புகளின் பட்டியல் அறிவிப்பு .

ஜூலை.................................................................................. பரிசளிப்பு விழா

==========================================================